A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
-Mahatma Gandhi


# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building,Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email :tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in


**முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்**

**<u>மேல்முறையீட்டு மனு எண் 52 / 2023</u>**

திரு A. நடராஜன்,
M/s. N.R. Blue Metals,
S.F.No. 75/2, சின்ன கந்திலி கிராமம்,
திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்.

………மேல்முறையீட்டாளர்
(Rep. by திரு C.வாகீஷ்வரன், வழக்கறிஞர்)

எதிர்

1) செயற்பொறியாளர்/ இ&ப/ திருப்பத்தூர்,
திருப்பத்தூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
34 F, லண்டன் மிஷன் ரோடு, சௌகாத்அலிபெட்,
திருப்பத்தூர், வேலூர் – 635 601.

2) உதவி செயற்பொறியாளர்/ இ&ப / வடக்கு/ திருப்பத்தூர்,
திருப்பத்தூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
34 F, லண்டன் மிஷன் ரோடு, சௌகாத்அலிபெட்,
திருப்பத்தூர், வேலூர் – 635 601.

3) உதவி மின்பொறியாளர்/ இ&ப / கந்திலி,
திருப்பத்தூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
கந்திலி ராஜவீதி – 635 901.

. . . எதிர்மனுதாரர்கள்
(திரு G. அருள்பாண்டியன், செயற்பொறியாளர்/ இ&ப/ திருப்பத்தூர்
திரு V. பிரபு, உதவி செயற்பொறியாளர்/ இ&ப / வடக்கு/ திருப்பத்தூர்
திரு P.K. ஆனந்தன், உதவி மின்பொறியாளர்/ இ&ப / கந்திலி)

**<u>மனு பெறப்பட்ட நாள்: 20-07-2023</u>**

**<u>கேட்புரை நாள்: 26-09-2023</u>**

**<u>ஆணை நாள்: 06-10-2023</u>**

20.07.2023 அன்று பெறப்பட்ட திரு A. நடராஜன், M/s. N.R. Blue Metals, S.F.No. 75/2, சின்ன கந்திலி கிராமம், திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம் அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 52/2023 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 26.09.2023 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

### 1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:

24 மணி நேர மின்சாரம் வழங்காததால் ஏற்பட்ட நட்டத்திற்கு இழப்பீடு தொகை வழங்குமாறும் தான் செலுத்திய விஸ்தரிப்பு தொகையினை திருப்பித்தருமாறும் மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

### 2.0 வழக்கின் சுருக்கம்:

2.1 மின் இணைப்பு எண் 08-406-003-372-இல் 24 மணி நேர மின்சாரம் வழங்காததால் ஏற்பட்ட நட்டத்திற்கு இழப்பீடு வழங்குமாறும் தான் செலுத்திய விஸ்தரிப்பு தொகையினை திருப்பித்தருமாறும் மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.2 உயர் மின்னழுத்த மின்னிணைப்பு வழங்குவதற்கான மின் நீட்டிப்பு பணிகள் முடிக்கப்பட்டு மனுதாரருக்கு முதல் Supply availability notice 04.06.2019 அன்று வழங்கப்பட்டு 90 நாட்கள் முடிவடைந்த நிலையில், மேல்முறையீட்டாளர் மின் இணைப்பு பெற்றுக் கொள்ள முன் வராததால், மீண்டும் இரண்டாம் Supply availability notice 04.09.2019-ல் மேல்முறையீட்டாளருக்கு வழங்கப்பட்டு Safety certificate-ஐ அளித்த பிறகு உயரழுத்த மின் இணைப்பு 07.09.2019 அன்று வழங்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 தனது மின் இணைப்பு எண்ணில் 24 மணி நேர மின்சாரம் வழங்காததால் இழப்பீடு வேண்டி மேல்முறையீட்டாளர் திருப்பத்தூர் மின்பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை 20.01.2023 அன்று அணுகியுள்ளார்.

2.4 மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், திருப்பத்தூர் மின்பகிர்மான வட்டம் 30.03.2023 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

3.0 <u>மன்றத்தின் தீர்வு :</u>

3.1 திருப்பத்தூர் மின்பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 30.03.2023 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *"மன்றத்தின் தீர்வு:*
> *எதிர்மனுதாரர் மனுதாரரின் தொழிற்சாலைக்கு நான்காம் கம்பி (4th wire) அமைத்து 24 மணி நேர மும்முனை மின்சாரம் வழங்க அதற்குண்டான மதிப்பீடு தொகை செலுத்த முன்வரும்பட்சத்தில் எதிர்மனுதாரர் அதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ள உத்திரவிட்டு இம்மனு, இதனுடன் முடித்து வைக்கப்படுகிறது. மேலும் மனுதாரர் கோரும் நஷ்ட ஈடு வழங்க இயலாது என தீர்வு செய்யப்படுகிறது."*

4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 14.09.2023 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது. கேட்புரையின் போது மேல்முறையீட்டாளரின் வழக்கறிஞர் கேட்புரையை தள்ளி வைக்குமாறு கோரியிருந்த நிலையில் கேட்புரை தள்ளி வைக்கப்பட்டு 26.09.2023 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் சார்பாக திரு C.வாகீஷ்வரன், வழக்கறிஞர் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர்கள் திரு G. அருள்பாண்டியன், செயற்பொறியாளர்/ இ&ப/ திருப்பத்தூர், திரு V. பிரபு, உதவி செயற்பொறியாளர்/ இ&ப / வடக்கு/ திருப்பத்தூர் மற்றும் திரு P.K. ஆனந்தன், உதவி மின்பொறியாளர்/ இ&ப / கந்திலி திருப்பத்தூர் மின் பகிர்மான வட்டம் ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதத்தை எடுத்துரைத்தனர்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:

5.1 மேல்முறையீட்டாளர் மேற்குறிப்பிட்ட முகவரியில் என்.ஆர், புளூமெட்டல் தொழிற்சாலைக்கு தாழ்வழுத்த மின்இணைப்பு (LTCT) எண்.08-406-003-372 பெற்று 'தொழில்நடத்தி வந்திருந்ததாகவும் அந்த தொழிற்சாலைக்கு பெற்றிருந்த மின்பளு போதுமானதாக இல்லாததால் கடந்த 24.12.2018 தேதியில் புதிய தொழிற்சாலை அமைக்க உயர்மின்னழுத்த மின்இணைப்பு வேண்டி சென்னை தலைமையிடமாக கொண்ட தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் கட்டுபாட்டின் கீழ் திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள மேற்பார்வை பொறியாளர், திருப்பத்தூர் மின்பகிர்மான வட்டம் அலுவலகத்தில் விண்ணப்பம் சமர்பித்ததாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.2 அதன் அடிப்படையில் மேற்பார்வை பொறியாளர் திருப்பத்தூர் மின்பகிர்மான வட்டம் அவர்கள் தலைமையில் அவரின் கட்டுப்பாட்டில் உள்ள அதிகாரிகள் செயற்பொறியாளர்/இ.கா./திருப்பத்தூர், உதவி செயற்பொறியாளர்/இ.கா./திருப்பத்தூர் ஆகியோர்கள் கள ஆய்வுக்கு பின் உயர்மின்அழுத்த மின்இணைப்பு வழங்க தமிழ்நாடு மின் ஒழுங்கு முறை ஆணையத்தால் வரையறுக்கப்பட்டு வழிகாட்டப்பட்ட தொகைகள் ரூபாய்.2,57,885/- செலுத்த அறிவிப்பு பெறப்பட்டு செலுத்தப்பட்டதாகவும், மேற்படி தொகையில் மதிப்பீடு கட்டணம் ரூபாய்.1,30,310/- உள்ளடங்கியது எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 மேற்பார்வை பொறியாளர் / திருப்பத்தூர் மனுதாரருக்கு வழங்கப்பட வேண்டியது புதிய உயர்மின்னழுத்த தொழிற்சாலை என்பதையும், ஏற்கனவே இருந்த குறைந்த மின்னழுத்த தொழிற்சாலை மின்இணைப்பு 08-406-003-372-ன் கணக்குகள்

முடிக்கப்பட்டு புதிய உயர்மின்னழுத்த தொழிற்சாலைக்கு புதிய மின்இணைப்பு எண் ஒதுக்கீடு செய்யப்பட்டு, குறைந்த மின்அழுத்த தொழிற்சாலை மின்இணைப்புக்கும் உயர்மின் அழுத்த தொழிற்சாலைக்கு மின்இணைப்பு எந்த பின் தெடர்ச்சியும் இருக்காது என்பதை கருத்தில் கொள்ளாமல், ஏதோ ஒரு உள் நோக்கத்தோடு மனுதாரர் விண்ணபித்திருந்தது ஏற்கனவே இருந்த பழைய தொழிற்ச்சாலை என்பதாக கருதி மனுதாரருக்கு நஷ்டம் ஏற்படுத்தும் விதமாக R&C கட்டுப்பாட்டில் உள்ள கிராமிய மின்பாதை வழியாக குறைந்த நேரமே மும்முனை மின்சாரம் விநியோகம் செய்யப்பட்டு மின்பாதை வழியாக மின்சாரம் வழங்கி தனக்கு பெரும் நஷ்டத்தை ஏற்படுத்திவிட்டதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 இது சம்பந்தமாக மனுதாரர் கடந்த 19.03.2019 மற்றும் 27.03.2019–ல் மேற்பார்வை பொறியாளர்/திருப்பத்தூர் மின்பகிர்மான வட்டம்/திருப்பத்தூர் அவர்களுக்கு புதிய உயர் மின்னழுத்த தொழிற்சாலைக்கு கிராமிய மின்பாதையில் இணைக்காமல் தடையில்லா மும்முனை மின்சாரம் வழங்க ஏதுவாக உள்ள மின்பாதையில் இணைத்து Extension works under Capital scheme–ல் மின்இணைப்பு வழங்க தமிழ்நாடு மின்பகிர்மான கழகத்தின் வழிகாட்டுதல்களை கோடிட்டும், மேற்பார்வை பொறியாளர்/திருப்பத்தூர் மின்பகிர்மான வட்டம் திருப்பத்தூர் இவர்களின் பார்வைக்காக இணைத்து பலமுறை அனுப்பிவைத்துள்ளதாகவும், ஆனால் மேற்பார்வை பொறியாளர்/திருப்பத்தூர் அவர்கள் மனுதாரருக்கு எந்த ஒரு நடவடிக்கையோ அல்லது விளக்க கடிதமோ கடந்த இரண்டு ஆண்டுகளாக தெரிவிக்கப்படவில்லை என்பதால் மனுதாரர் கடந்த 23.11.2022ல் அஞ்சலக பதிவு தபால் வாயிலாக எதிர்மனுதாரர்களுக்கு மீண்டும் கடிதம் ஒன்று அனுப்பியும் அதற்கும் எந்த ஒரு நடவடிக்கையோ அல்லது விளக்க கடிதமோ அனுப்பிவைக்கப்படாததால் மனுதாரர் தன்னுடைய கோரிக்கைக்கு பரிகாரம் கேட்டு கடந்த 20.01.2023ல் ஆன்லயன் வழியாக மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் திருப்பத்தூர்க்கு மனு அளிக்கப்பட்டதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.5 தலைவர் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், திருப்பத்தூர் அவர்கள் மேற்படி மனுவை கடந்த 30.03.2023–ல் மனுதாரருடன் நேரடி விசாரணையில் மனுதாரர் ஆகிய தான் கடந்த ஆண்டுகளாக உயர் மின் அழுத்த புதிய தொழிற்சாலைகளுக்கு எவ்வாறு மின்இணைப்பு வழங்க மின் நீட்டிப்பு பணிகள் மேற்கொள்ள பட வேண்டும் என்பதனை

கோடிட்டு காட்டிய பல்வேறு வாரிய நடைமுறைகள் மற்றும் கருத்துருகள் ஆவணங்களாக 1. Circular Memorandum No.SE/IEMC/EE3/Aee1/549/93, Dated 29.06.1993 2. Lr.no.CE/Comml/EET/AEE1/F.M/s.Sattur Sri Venkateswara/D.no.38/12.dt.18.02.12 மற்றும் 3. Lr.no.SEK/D/F.5(HT.SC.New)/AEI/D.no1885/2012.dt.17.01.13 சமர்பித்தும், நேரடியாக வாதுரைத்தும் எந்த ஒரு தீர்வு மற்றும் நிவாரணம் அளிக்காமல் மனுதாரரின் கோரிக்கை மற்றும் நியமங்களை பரிசீலனை செய்யாமல் உண்மைக்கும் நீதிக்கும் தர்மத்திற்கும் அப்பாற்பட்டு ஏற்கனவே மனுதாரருக்கு இழைக்கபட்ட அநீதி செயலை மறைத்து நியாயப்படுத்தும் எண்ணத்தோடு ஏற்கனவே மின் இணைப்பு பெற்று இயங்கிவரும் ஒரு கல்வி நிறுவனத்திற்காக வழங்கப்பட்ட இந்த உத்தரவை Memo No.SE/IEMC/EE3/Aee1/F.Inst./D.912/97,D.15.11.1997. மனுதாரர் 24.12.2018ல் விண்ணப்பித்த புதிய உயர் மின் அழுத்த தொழிற்சாலைக்கு ஒப்பிட்டு அதன் பின்னர் அதே மின்வினியோக வட்டங்களுக்கு புதிய உயர் மின் அழுத்த தொழிற்சாலைக்கு எவ்வாறு மின் நீட்டிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் மற்றும் எவ்வாறு மின் நீட்டிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்ற தனது இணைப்பு ஆவணங்கள் மற்றும் வாதுரைகளை பரிசீலனை செய்ய தவறி 30.03.2023–ல் தலைவர் மற்றும் குழுவினர்கள் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் திருப்பத்தூர் அவர்கள் மனுதாரருடைய மனுவையும் அத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்பட்ட ஆவணங்களையும் முழுமையாக பரிசீலனை செய்யாமலும் 30.03.2023ல் வழங்கப்பட்ட உத்தரவில் தலைமை பொறியாளர்(வணிகம்)/தலைமை அலுவலகம்/ சென்னை அவர்களின் Lr.no.CE/Comml/EET/AEE1/F.M/s.Sattur Sri Venkateswara/ D.no.38/12. Dt.4.18.02.12–ல் வழங்கப்பட்டிருந்த கருத்துருவை மற்றும் வேலூர் தலைமை பொறியாளரின் கட்டுப்பாட்டின் கீழ் இயக்கத்தில் உள்ள திருப்பத்தூர் மின்பகிர்மான வட்டத்தை போல இருந்து வரும் கிருஷ்னகிரி மின்பகிர்மானத்தின் வட்டத்தில் இது போல வழங்கப்பட்ட புதிய உயர் மின்னழுத்த தொழிற்சாலைக்கு வாரிய செலவில் 24 மணிநேர மின்சாரம் வழங்கபட்டிருக்கும், Lr.no.SEK/D/F.5(HT.SC.New)/AEI/D.no.1885/ 2012.dt.17.01.13. நடைமுறைகளையும் சுட்டிக்காட்டியும் கண்டுக்கொள்ளாமல் ஏதோ ஒரு மிகவும் பழமையான புதிய உயர் மின்அழுத்த தொழிற்சாலைக்கு முற்றிலும் பொருந்தாத, Memo No.SE/IEMC/EE3/Aee1/F.Inst/ D.912/97 Dt.15.11.1997 ஐ சுட்டிக்காட்டி கிட்டத்தட்ட

4 வருட காலம் கடத்தி மழுப்பலாக பிறப்பித்த உத்தரவினை ரத்து செய்ய வேண்டுமாறு மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.6 மேலும் மனுதாரருக்கு கடந்த 18.03.2020-ல் தலைமை பொறியாளர் (வணிகம்) தலைமை அலுவலகம்/சென்னை அவர்களுக்கு கடிதம் வாயிலாக தமிழ் நாடு மின் பகிர்மான கழகத்தின் வழிகாட்டுதல்களை கோடிட்டு அனுப்பிவைக்கபட்டதிலும், நினைவூட்டும் விதமாக கடந்த 14.09.2020-ல் அனுப்பிவைக்கபட்டிருந்ததிலும், தனக்கு எந்த விதத்திலும் புதிய உயர்மின்னழுத்த 'தொழிற்சாலைக்கு 24 மணி நேர மின்சாரத்தை மேற்பார்வை பொறியாளர் திருப்பத்தூர் வழங்க தீர்வு காணப்படாமல், ஏதோ ஒரு உள் நோக்கத்தோடு தனக்கு நஷ்டம் ஏற்படுத்தும் விதமாக அதாவது R&C கட்டுப்பாட்டில் உள்ள கிராமிய மின்பாதை வழியாக குறைந்த நேரமே மும்முனை மின்சாரத்தை வழங்கி 24மணி நேரத்திற்கு என்று நிர்ணயிக்கப்பட்ட உயர் மின்அழுத்த மின்இணைப்புக்கான வீதப்பட்டியலில் குறிப்பட்ட (Demand Charges) நிலையான கட்டணம் ஒரு கி.வோ.ஆ (KVA) க்கான ரூ350ஐ மின்னினைப்பு (Service No:089094130138) வழங்கப்பட்ட Sep-19 நாளிலிருந்து இதுநாள் வரை Sep-22 ரூ.25,28,456/-( TOTAL DEMAND CHARGES. Rs. 2528456/-) மனுதாரரிடமிருந்து வசூல் செய்து இருப்பது சட்டப்படியும் நியாயப்படியும் ஏற்புடையாமல் உள்ளதாகவும், இதன் காரணமாக தனது புதிய தொழிற்சாலைக்கு வாங்கப்பட்ட புதிய உபகரணங்களால் ஏற்பட்ட கடன்களை திருப்பி செலுத்த வழியில்லாமல் கடன் சுமை இது நாள் வரை கு.10,00,000 (ரூபாய் பத்து லட்சம்) ஏற்பட்டு தான் மிகவும் மன உளைச்சலுக்கு ஆளாகி இருப்பதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.7 27.03.2019 மற்றும் 14.09.2020-ல் (Remainder-1) தன்னால் அனுப்பிவைக்கப்பட்ட கடிதத்திற்கு எந்த ஒரு தீர்வும் எடுக்கப்படாமல் இருந்தமைக்கு தமிழ்நாடு மின்சார ஒழுங்கு முறை ஆணையத்தால் வழிகாட்டப்பட்ட Distribution Standards of Performance Regulation 2004 (amendments updated up to 28.02.2017)-ன் அட்டவணையில் வ.எண்.5A(c) involving up-gradation of HT net work & வ.எண்.(8) Grievance handling க்காக தெரிவிக்கபட்ட தொகைகள் வழங்குமாறு மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.8 Circular Memorandum No.SE/IEMC/EE3/Acc1/549/93,Dated.29.06.1993-ல் தெரிவிக்கபட்டுள்ள வழிகாட்டுதல் படியும் அதன் பின்னர் சென்னை தலைமையிடமாக கொண்ட தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் உயர் மின்அழுத்த மின்இணைப்புக்கான கருத்துரைகளை வழங்கக்கூடிய தெழில்நுட்ப பிரிவின் தலைமைபொறியாளர் (வணிகம்)/சென்னை அவர்கள் தலைமைபொறியாளர் (பகிர்மானம்) /திருநெல்வேலி மண்டலம்/திருநெல்வேலி அவர்களுக்கு அளித்த கருத்துரு கடிதம் Lr.No.CE/Comml/EET/AEE1/F.M/s.Sattur Sri.Venkateswara /D.no38/12. dt.18.02.12 ல் தெரிவிக்கப்பட்டுள்ளபடி தனது உயர் 'மின் 'அழுத்த' மின்இணைப்புக்கு மறுக்கப்பட்ட மும்முனை மின்சாரம் Extention works under Capital scheme-ல் வழங்க வேண்டும் எனவும், அதுவரை மும்முனை மின்சாரம் வழங்கப்படும் நேரத்திற்கு மட்டும் (Demand Charges) நிலையான கட்டணம் ஒரு கி.வோ.ஆ (KVA) க்கான 350-ஐ மின்னிணைப்பு (Service No:089094130138) வசூலிக்க வேண்டும் எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.9 24 மணி நேர மின்சாரம் வழங்கப்பட வேண்டும் என்றும் இதுநாள் வரை தனக்கு அவர்களால் ஏற்பட்ட நஷ்டத்தை சரிசெய்யும் விதமாக கீழ்கண்ட பரிகாரம் மற்றும் நஷ்டயீட்டு தொகை ரூ.25,28,456/- + ரூ.10,00,000 /-ஆக மொத்தம் ரூ.35,28,456/- (ரூபாய் முப்பத்து ஐந்து லட்சத்து இருபத்தெட்டாயிரத்தி நாநூற்று ஐம்பத்தி ஆறு மட்டும்) வழங்க வேண்டி கேட்டு கொள்வதாகவும், மேலும் புதிய தொழிற்சாலைகளுக்கு தமிழ்நாடு மின்சார ஒழுங்கு முறை ஆணையத்தால் வரையறுக்கப்பட்டு வழிகாட்டப்பட்ட தொகைகளை உள்ளடக்கிய விரிவாக்க தொகை விண்ணப்பதரரர்களிடம் வசூல் செய்யப்படும் சமயத்தில் மீண்டும் விஸ்திரிப்பு பணிகளுக்கு கட்டணம் வசூல் செய்ய தேவையில்லை என்றும் ஏற்கனவே அவ்வாறு வசூல் செய்யபட்டிருந்தால் விண்ணபதாரர்கள் செலுத்திய விஸ்தரிப்பு தொகையினை திருப்பித்தர வேண்டும் என்றும் Extention works under Capital scheme தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை தமிழ்நாடு மின்சார ஒழுங்கு முறை ஆனையத்தால் வழங்கப்பட்ட TA.No.7 of 2021 மற்றும் தற்போது வரை அறிவுறுத்தப்பட்ட உத்தரவுகளின் அடிப்படையிலும் தனது இந்த மேல்முறையீட்டு மனுவை சமர்ப்பிப்பதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.10 மேலும் தனது வயது மூப்பு காரணமாகவும், உடல் நலம் குறைபாடு காரணமாகவும் மேல்முறையீட்டு மனுவை சமர்பிக்க ஏற்படும் காலதாமதத்திற்கு இந்த மாமன்றம் ஏற்பு செய்து விசாரனைக்கு ஏற்க வேண்டுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

**6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:**

6.1 மனுதாரர் திரு.A.நடராஜன் அவர்களுக்கு மேற்கண்ட முகவரியில் LTCT தொழிற்சாலை மின் இணைப்பு எண்: 406-003-372 04.05.2009 அன்று வழங்கப்பட்டுள்ளதகாவும், அதன் பிறகு, மனுதாரர் உயர் மின்னழுத்த மின் இணைப்பு கோரி அளித்த விண்ணப்பம் 14.02.2019-ல் பதிவு செய்யப்பட்டு, 04.03.2019 அன்று மதிப்பீடு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 மனுதாரர் மதிப்பீட்டுத் தொகை ரூ.2.57,885/- 19.03.2019 அன்று செலுத்தியுள்ளதாகவும், மேலும் உயர் மின்னழுத்த மின்னிணைப்பு வழங்குவதற்கான மின் நீட்டிப்பு மதிப்பீடு கட்டணம் ரூ.1,30,310/- மேற்கண்ட கட்டணத்தில் உள்ளடக்கியதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 மேலும் மனுதாரர் 19.03.2019 அன்று, தன்னுடைய தொழிற்சாலையின் உயரழுத்த மின் இணைப்பிற்கு 24 மணி நேர மும்முனை மின்சாரம் வழங்கக் கோரி விண்ணப்பம் அளித்துள்ளதாகவும், இதற்கு மேற்பார்வை பொறியாளர்/ திருப்பத்தூர் அவர்கள் 24 மணி நேர மும்முனை மின்சாரம் வழங்க உரிய மதிப்பீட்டு கட்டணம் செலுத்த உரிய சம்மதக் கடிதம் அளிக்கும் பட்சத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று 28.03.2019 நாளிட்ட கடிதம் மூலம் மனுதாரருக்கு தெரிவித்துள்ளதாகவும், ஆனால் மனுதாரர் 24 மணி நேர மும்முனை மின்சாரம் பெறுவதற்கு உண்டான மதிப்பீட்டு கட்டணம் செலுத்த இசைவு கடிதம் ஏதும் அளிக்கவில்லை எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 உயர் மின்னழுத்த மின்னிணைப்பு வழங்குவதற்கான மின் நீட்டிப்பு, பணிகள் முடிக்கப்பட்டு மனுதாரருக்கு முதல் Supply availability notice 04.06.2019 அன்று வழங்கப்பட்டுள்ளதாகவும், Supply Availability notice அளித்து 90 நாட்கள் முடிவடைந்த நிலையில், மனுதாரர் Safety Certificate அளித்து மின் இணைப்பு பெற்றுக் கொள்ள முன் வராததால், மீண்டும் இரண்டாம் Supply availability notice 04.09.2019-ல் மனுதாரருக்கு

வழங்கப்பட்டதாகவும், மனுதாரர் Safety certificate–ஐ அளித்த பிறகு உயரழுத்த மின் இணைப்பு 07.09.2019 அன்று வழங்கப்பட்டதாகவும், உயரழுத்த மி.இ.எண்: 089094130138 ஆகும், தற்சமயம் அத்தொழிற்சாலைக்கு 14 மணி நேரம் மின்னூட்டம் வழங்கப்பட்டதாகவும் தெரிவித்தார். மேலும் மனுதாரர் திருப்பத்தூர் மின்பகிர்மான வட்ட நுகர்வோர் குறை தீர்வு மன்றத்தில் அவருடைய தொழிற்சாலைக்கு 24 மணி நேர மும்முனை மின்சாரம் வாரிய செலவில் கட்டமைத்து தர கோரியும், இழப்பீடு தொகை வழங்கக் கோரியும் 20.01.2023 அன்று மனு அளித்துள்ளார் எனவும், அம்மனு மீது 30.03.2023 அன்று விசாரணை நடைபெற்றதாகவும், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், திருப்பத்தூர் தீர்ப்பாணை வழங்கியுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 மேற்கூறிய தீர்ப்பாணையின்படி மனுதாரர் அவருடைய தொழிற்சாலைக்கு 24 மணி நேர மும்முனை மின்சாரம் வழங்க உரிய மதிப்பீட்டுக் கட்டணம் செலுத்த இசைவுக் கடிதம் ஏதும் அளிக்கவில்லை என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

## 7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 இவ்வழக்கை ஒட்டிய கீழ்கண்ட வினாக்கள் எழுகின்றன.

1. மேல்முறையீட்டாளர் தனது தாழ்வழுத்த தொழிற்சாலையை உயரழுத்த மின்பாதையாக மாற்ற விண்ணப்பித்த நிலையில் தன்னுடைய உயரழுத்த மின் இணைப்புக்கு 24 மணி நேரம் மின்சாரம் வழங்க நடைமுறையில் உள்ள வழிகாட்டு உத்தரவுகளை பின்பற்றாமல் மின் இணைப்பு வழங்கப்பட்டதாக கூறும் கோரிக்கை ஏற்புடையதா?
2. மேல்முறையீட்டாளர் கிராமிய மின்பாதை வழியாக குறைந்த நேரமே மும்முனை மின்சாரத்தை வழங்கி 24 மணி நேரத்திற்கு என்று நிர்ணயிக்கப்பட்ட உயர் மின்அழுத்த மின்இணைப்புக்கான வீதப்பட்டியலில் குறிப்பட்ட (Demand Charges) நிலையான கட்டணம் ஒரு கி.வோ.ஆ (KVA) க்கான ரூ350/–ஐ மின்னிணைப்பு வழங்கப்பட்ட Sep–19 நாளிலிருந்து Sep–22 வரை செலுத்திய ரூ.25,28,456/– மற்றும் கடன் சுமை

ரூ.10,00,000/- (ரூபாய் பத்து லட்சம்) ஏற்பட்டு தான் மிகவும் மனஉளைச்சலுக்கு ஆளாகி இருப்பதால் இழப்பீடு தொகை வழங்கும் கோரிக்கை ஏற்புடையதா?

3. மேல்முறையீட்டாளர் புதிய தொழிற்சாலைக்கு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால் வரையறுக்கப்பட்ட விஸ்தரிப்புக்கான கட்டணங்களை செலுத்திய நிலையில் மீண்டும் விஸ்தரிப்பு கட்டணம் செலுத்த தேவையில்லை என்றும் ஏற்கனவே வசூலித்த விஸ்தரிப்புக்கான மின் கட்டண தொகையை திரும்பக் கோரும் கோரிக்கை ஏற்புடையதா?

**8.0 <u>வழக்கெழு வினா 1-ற்கான தீர்வு</u>:**

8.1 மேல்முறையீட்டாளர் தனது தாழ்வழுத்த தொழிற்சாலையை உயரழுத்த மின்பாதையாக மாற்ற விண்ணப்பித்த நிலையில் தன்னுடைய உயரழுத்த மின் இணைப்புக்கு 24 மணி நேரம் மின்சாரம் வழங்க நடைமுறையில் உள்ள வழிகாட்டு உத்தரவுகளை பின்பற்றாமல் மின் இணைப்பு வழங்கப்பட்டதாகவும் எனவே தன்னுடைய தொழிற்சாலைக்கு நடைமுறையில் உள்ள வழிகாட்டு உத்தரவுகளை பின்பற்றி 24 மணி நேரம் மின்சாரம் வழங்க கோரியுள்ளார்.

8.2 மேற்கண்ட கோரிக்கை சம்பந்தமான வாத, பிரதி வாதங்களை ஆராய்ந்து தகுதியின் அடிப்படையில்தான் முடிவு மேற்கொள்ள வேண்டும். ஆனால், மேல்முறையீட்டாளரின் கோரிக்கையிலுள்ள அதே நுதல் பொருள் (Subject matter) சம்பந்தமாக தற்பொழுது மாண்புமிகு ஆணையத்தின் முன்பாக திரு.சேவியர், தூத்துக்குடி என்பவரால் M.P.No.7 of 2022 என்ற வழக்கு நடைபெற்று வருவதாக அறிய முடிகிறது. எனவே, M.P.No.7 of 2022 உள்ள சம்பந்தப்பட்ட கோரிக்கைகளை பார்வையிட விரும்புகிறேன். M.P.No.7 of 2022-ன் கோரிக்கைகள் (Prayer) கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *"7.1 Request the Hon'ble Commission to direct Tangedco to supply LT three phase power supply 24 hours in a day on regular basis for my industry. No limitation in three phase supply shall be permitted.*
>
> *7.2 Request the Hon'ble Commission to issue suitable and appropriate direction to the licensee to stop such illegal restriction of power supply as discussed above with immediate effect.*
>
> ******* "*

மேற்கண்ட M.P.No.7 of 2022–ல் உள்ள கோரிக்கைகள் மற்றும் மேல்முறையீட்டாளரின் கோரிக்கைகள் ஆகியவற்றை ஆராயும்போது அக்கோரிக்கைகளில் உள்ள நுதல் பொருளானது தொழிற்சாலைக்கு நடைமுறையில் உள்ள வழிகாட்டு உத்தரவுகளை பின்பற்றி 24 மணி நேரம் மின்சாரம் வழங்க வேண்டும் என்பதுதான். எனவே, மேல்முறையீட்டாளரின் கோரிக்கை சம்பந்தமாக தீர்வு செய்வதற்கு முன்பாக மின் நுகர்வோரின் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்சார குறைதீர்ப்பாளர் ஒழுங்குமுறை விதிகளின் 17(4) விதியை ஆராய வேண்டும். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"17 (4) No complaint to the Electricity Ombudsman shall lie unless:*

***

*(c) The complaint, which is not settled, is not in respect of the same subject, which was settled through the office of the Electricity Ombudsman in any previous proceedings whether received from the same complainant or along with one or more complainants or anyone or more of the parties concerned with the subject matter;*

*(d) The complaint does not pertain to the same subject matter for which any proceedings before any court is pending or a decree or award or a final order has already been passed by any competent court."*

8.2 மேற்கண்ட விதி 17(4) (c) மற்றும் (d) யில் கூறியுள்ளவாறு முறையீட்டின் நுதல் பொருள் சம்பந்தப்பட்ட எந்தவொரு வழக்கும் நீதிமன்ற நடவடிக்கையில் இருந்தாலோ அல்லது அதுசம்பந்தமாக ஆணையோ அல்லது உறுத்துக் கட்டளையோ வழங்கி இருந்தாலோ அம்முறையீடு சம்பந்தமாக மின்குறைத் தீர்ப்பாளர் எந்தவொரு தீர்வும் வழங்க இயலாது என அறிய முடிகிறது. எனவே, மேல்முறையீட்டாளரின் நுதல் பொருள் சம்பந்தமாக ஆணையத்தின் முன்பாக தற்பொழுது வழக்கு நடைபெற்று வரும் நிலையில் அதே நுதல் பொருள் சம்பந்தமான முறையீட்டிற்கு மின்குறை தீர்ப்பாளரால் தீர்வு எதுவும் வழங்க இயலாது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

8.3 மேலும், தற்பொழுது நடைபெற்று வரும் வழக்கு எண். M.P.No.7 of 2022–ல் மாண்புமிகு ஆணையம் உரிய ஆணை வழங்கிய பின்பு, அவ்வாணையின்படி மேல்முறையீட்டாளரின் கோரிக்கை சம்பந்தமாக எதிர்மனுதாரர் உரிய நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.

## 9.0 <u>வழக்கெழு வினா 2-ற்கான தீர்வு</u>:

9.1 மேல்முறையீட்டாளர் தன்னுடைய வாதுரையில், கிராமிய மின்பாதை வழியாக குறைந்த நேரமே மும்முனை மின்சாரத்தை வழங்கி 24 மணி நேரத்திற்கு என்று நிர்ணயிக்கப்பட்ட உயர் மின்அழுத்த மின்இணைப்புக்கான வீதப்பட்டியலில் குறிப்பட்ட (Demand Charges) நிலையான கட்டணம் ஒரு கி.வோ.ஆ (KVA) க்கான ரூ350/-ஐ மின்னிணைப்பு வழங்கப்பட்ட Sep-19 நாளிலிருந்து Sep-22 வரை ரூ.25,28,456/- மனுதாரரிடமிருந்து வசூல் செய்து இருப்பது சட்டப்படியும் நியாயப்படியும் ஏற்புடையாமல் உள்ளதாகவும், இதன் காரணமாக தனது புதிய தொழிற்சாலைக்கு வாங்கப்பட்ட புதிய உபகரணங்களால் ஏற்பட்ட கடன்களை திருப்பி செலுத்த வழியில்லாமல் கடன் சுமை இது நாள் வரை ரூ.10,00,000/- (ரூபாய் பத்து லட்சம்) ஏற்பட்டு தான் மிகவும் மனஉளைச்சலுக்கு ஆளாகி இருப்பதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

9.2 மேல்முறையீட்டாளரின் கோரிக்கையான செப்டம்பர் 2019 முதல் செப்டம்பர் 2022 வரை தான் பயன்படுத்தி செலுத்திய பெரும் மின்தேவை கட்டணம் (Total demand charges) ரூ.25,28,456/- தொகையை திருப்பி தரும் கோரிக்கை சம்பந்தமாக தீர்வு செய்ய மேல்முறையீட்டாளர் உரிமதாரரிடம் ஒப்புதல் செய்து கொண்ட இசைவுப் பத்திர படிவம் 8-இல் பத்தி எண் 6 கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"xxx*

*xxx*

***6. Obligation of consumer to pay all charges levied by Licensee***

*From the date this agreement comes into force the consumer shall be bound by and shall pay the Licensee, maximum demand charges, energy charges, surcharges, meter rents and other charges, if any, in accordance with the tariffs applicable and the terms and conditions of supply notified from time to time for the appropriate class of consumers to which such consumer belongs."*

9.3 மேற்கூறிய விதியின்படி இசைவுப் பத்திரத்தின் அடிப்படையில் நுகர்வோர் உரிமதாரர் விதிக்கும் அனைத்துக் கட்டணங்களையும் செலுத்துவதற்கு கடமைப்பட்டுள்ள நிலையில் செப்டம்பர் 2019 முதல் செப்டம்பர் 2022 வரை பயன்படுத்திய பெரும மின் தேவை கட்டணத்தை திருப்பித் தருமாறும் கோருவது ஏற்புடையதல்ல என்பதால் மேல்முறையீட்டாளரின் கோரிக்கை நிராகரிக்கப்படுகிறது.

9.4 **மேல்முறையீட்டாளரின் அடுத்த கோரிக்கையான மன உளைச்சலுக்காக ரூ.10,00,000/- இழப்பீடு வழங்க வேண்டும் என கோரியுள்ளார்.** இது சம்பந்தமாக நான் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின் விதி 7(11)ஐ ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"7. .....................*

*.............................*

*(11) குறை முறையீடு, சட்டத்தின் 57 (1) வது பிரிவின்படி, ஆணையத்தால் குறிப்பிடப்பட்டுள்ள உரிமதாரர் கடைப்பிடிக்க வேண்டிய செயல் திறன் அளவுகளில் நுகர்வோர் சேவைத் திறன் அளவை உரிமதாரர் நிறைவேற்றாமை பற்றியதாக இருந்து, மன்றம் உரிமதாரர் தவறு செய்துள்ளார் என கண்டறிந்தால், நுகர்வோர் இழப்பீட்டுத் தொகை பெற தகுதியுள்ளவர் என முடிவு செய்யலாம். மேலும், நுகர்வோர் சம்மதித்தால், ஆணையத்தால் இது சம்பந்தமாக வகுக்கப்பட்ட ஒழுங்குமுறை விதிகளில் குறிப்பிட்டுள்ள இழப்பீட்டுத் தொகையைப் பெற ஒத்துக்கொள்ளலாம் என அறிவிக்கலாம்."*

9.5 மேற்கண்ட விதியை கூர்ந்து பார்க்கும்பொழுது நாம் அறிவது ஒழுங்குமுறை ஆணையத்தால் குறிப்பிடப்பட்டுள்ள செயல்திறன் அளவுகளில் நுகர்வோரின் சேவைத்திறன் அளவை உரிமதாரர் நிறைவேற்றாமை பற்றியதாக இருந்து, மன்றம் உரிமதாரர் தவறு செய்துள்ளார் என தெரிந்தால் நுகர்வோர் இழப்பீட்டு தொகையை பெறுவதற்கு தகுதியானவர் என்று முடிவு செய்யலாம் என்று தெரிகிறது. மேலும், ஆணையம், நிர்ணயித்துள்ள செயல்திறன் அளவுகளை உரிமதாரர் கடைபிடிக்காமல் இருந்தால் வழங்கப்படும் இழப்பீட்டு தொகையை தவிர வேறு நஷ்டஈடு வழங்குவதற்கு மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளில் வழி இல்லை என்று தெரிகிறது. **எனவே,** இந்த வழக்கில் கோரப்பட்டுள்ள நிவாரணங்கள் ஒழுங்குமுறை ஆணையத்தால் குறிப்பிடப்பட்டுள்ள செயல்திறன் குறைபாடு சம்பந்தமானது அல்ல என்பதால் மேற்கண்ட நஷ்டஈடு கோரிக்கை என்னால் பரிசீலிக்கப்படவில்லை என்று தீர்வு செய்யப்படுகிறது.

**10.0 <u>வழக்கெழு வினா 3-ற்கான தீர்வு</u>:**

**10.1 மேல்முறையீட்டாளர் தனது வாதுரையில் புதிய தொழிற்சாலைகளுக்கு தமிழ்நாடு மின்சார ஒழுங்கு முறை ஆணையத்தால் வரையறுக்கப்பட்டு வழிகாட்டப்பட்ட தொகைகளை உள்ளடக்கிய விரிவாக்க தொகை விண்ணப்பதாரர்களிடம் வசூல் செய்யப்படும் சமயத்தில் மீண்டும் விஸ்திரிப்பு பணிகளுக்கு கட்டணம் வசூல் செய்ய தேவையில்லை என்றும் ஏற்கனவே அவ்வாறு வசூல் செய்யபட்டிருந்தால் விண்ணபதாரர்கள் செலுத்திய விஸ்தரிப்பு தொகையினை தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் வழங்கிய TA.No.7 of 2021 உத்திரவின்படியும் தற்போது வரை**

அறிவுறுத்தப்பட்ட உத்தரவுகளின் அடிப்படையிலும் திருப்பித்தர வேண்டும் என கோரியுள்ளார். இதுசம்பந்தமாக மின் நுகர்வோரின் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்சார குறைதீர்ப்பாளர் ஒழுங்குமுறை விதிகளின் 17(4)ம் விதியை ஆராய வேண்டும். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *"17 (4) No complaint to the Electricity Ombudsman shall lie unless:*
>
> ***
>
> *(c) The complaint, which is not settled, is not in respect of the same subject, which was settled through the office of the Electricity Ombudsman in any previous proceedings whether received from the same complainant or along with one or more complainants or anyone or more of the parties concerned with the subject matter;*
>
> *(d) The complaint does not pertain to the same subject matter for which any proceedings before any court is pending or a decree or award or a final order has already been passed by any competent court."*

10.2 மேற்கண்ட விதி 17(4) (c) மற்றும் (d) யின்படி மேல்முறையீட்டாளரின் நுதல் பொருள் சம்பந்தமாக ஆணையம் ஏற்கனவே ஆணை வழங்கியுள்ள நிலையில் அதே நுதல் பொருள் சம்பந்தமாக மின்குறை தீர்ப்பாளரால் தீர்வு எதுவும் வழங்க இயலாது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

**11.0 <u>முடிவுரை</u>:**

11.1 மேற்கண்ட பத்திகளில் உள்ள தீர்வுகளின்படி மேல்முறையீட்டாளரின் கோரிக்கைகள் தள்ளுபடி செய்யப்படுகிறது.

11.2 மேற்கண்ட தீர்வுடன் இந்த மேல்முறையீட்டு மனு எண் 52/2023 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ந. கண்ணன்)**
மின்குறைதீர்ப்பாளர்

"நுகர்வோர் இல்லையேல் நிறுவனம் இல்லை"
**"No Consumer, No Utility"**

<u>பெறுநர்</u>

1) திரு A. நடராஜன், - By RPAD
M/s. N.R. Blue Metals,
S.F.No. 75/2, சின்ன கந்திலி கிராமம்,
திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்.

2) செயற்பொறியாளர்/ இ&ப/ திருப்பத்தூர்,
திருப்பத்தூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
34 F, லண்டன் மிஷன் ரோடு, சௌகாத்அலிபெட்,
திருப்பத்தூர், வேலூர் – 635 601.

3) உதவி செயற்பொறியாளர்/ இ&ப / வடக்கு/ திருப்பத்தூர்,
திருப்பத்தூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
34 F, லண்டன் மிஷன் ரோடு, சௌகாத்அலிபெட்,
திருப்பத்தூர், வேலூர் – 635 601.

4) உதவி மின்பொறியாளர்/ இ&ப / கந்திலி,
திருப்பத்தூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
கந்திலி ராஜவீதி – 635 901.

5) மேற்பார்வை பொறியாளர், – By email
திருப்பத்தூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
2/4B, பாலம்மாள் காலனி, திருப்பத்தூர் – 635 601.

6) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By email
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

7) செயலாளர், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் – By email
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

8) உதவி இயக்குநர் (கணினி) – தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.